# நபி -ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்- அவர்களின் தொழுகை முறை

1


இமாம், மற்றும் தனி நபர் ஒரு சுத்ராவை (தடுப்பை) முன்னால் வைத்துத் தொழுவது சுன்னாவாகும். மேலும் இமாமுக்கான சுத்ரா (தடுப்பு) அவருக்குப் பின்னால் இருப்பவர்களுக்கும் சுத்ராவாகும்.

தொழுபவர் ஸஜ்தா செய்யும் இடத்தின் மீது தன் பார்வையை நிலைநிறுத்துவார், அங்குமிங்கும் திரும்பிப்பார்க்கமாட்டார்.



①

தொழுபவர் தனது கால்களுக்கிடையே உள்ள இடைவெளியை தனது தோள்களுக்கு இடையே உள்ளதைப் போலவே, கூட்டாமலும் குறைக்காமலும் வைத்து பாதங்களின் வெளிப்புறத்தை சமமாக்குவார்.



②

அவர் தொழுகையின் நிபந்தனைகளை நிறைவேற்றிய பிறகு, கைகளை காதுகளுக்கு அல்லது தோள்புஜங்களுக்கு நேராக உயர்த்தி, விரல்களை விரிக்காது சேர்த்தவண்ணம், உள்ளங்கைகள் கிப்லாவை நோக்கியவாறு "அல்லாஹு" அக்பர்" என்று கூறுவார்.



③

பின்னர் அவர் தனது வலது உள்ளங்கையின் உட்புறத்தை இடது கையின் மணிக்கட்டின் மேல் வைத்து, அதை அவரது நெஞ்சில் கட்டிக்கொள்வார், அல்லது மணிக்கட்டின் மேல் வைத்த கையை இறுகப்பிடிக்கவும் முடியும்.



④

பின்னர் அவர் முதல் ரக்அத்தில் மட்டுமே தொழுகையின் தொடக்க துஆவை ஓதுவது விரும்பத்தக்கது. மேலும் தொடக்க துஆக்களில் நபி (ஸல்) அவர்கள் ஓதியதாக வந்துள்ள துஆக்களை தெரிவு செய்து ஓதுவது மிக்க நன்று. அவற்றில் இதுவும் ஒன்றாகும்:

ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக்க வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக்க வலா இலாஹ கைருக்க.

பின்னர், அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் என்று கூறுவார்.

பின்னர், பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்" எனக்கூறி சூறா அல்-ஃபாத்திஹாவை அதன் வசனங்கள், வார்த்தைகள், எழுத்துகள் மற்றும் ஹரகத்துகளுடன் வரிசையாக ஓதவேண்டும்.

பின்னர் அவர் அஊது... எனக்கூறாமல் குர்ஆனில் இருந்து அவருக்கு முடியுமானதை ஓதுவார், மேலும் அவர் சூராவின் ஆரம்பத்தில் மட்டும் பிஸ்மில்லாஹ் எனக் கூறுவார்.

⑤

பின்னர் ஆரம்ப தக்பீரில் கைகளை உயர்த்தியது போன்று உயர்த்தி, "அல்லாஹு"அக்பர்" என்று கூறி ருகூஃ செய்வார், பின்னர் முழங்கால்களைப் பிடித்து, முழங்கைகளை மடக்காமல், முதுகைத் தலைக்கு சமமாக நிமிர்த்தி, ஒரு முறை கட்டாயமாக "ஸுப்ஹான ரப்பியல் அழீம்" எனக் கூறுவார் மற்றும் மேலதிகமாக வந்த துஆக்களையும் ஓதுவது அவருக்கு விரும்பத்தக்கது.



⑥

பின்னர், எழுந்து, நிமிர்ந்து நிற்பதற்கு முன், "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்" என்று கூறுவார், அதே நேரத்தில் கைகளை காதுகள் அல்லது தோள்களுக்கு நேராக உயர்த்துவது சுன்னத்தாகும்.

அவர் நிமிர்ந்து நிலைக்கு வந்துவிட்டால், (ரப்பனா லகல்ஹம்து) என்று கூறுவார். மேலும் மேலதிகமாக வந்த துஆக்களையும் ஓதுவது அவருக்கு விரும்பத்தக்கது.


பிறகு கைகளை உயர்த்தாமல் தக்பீர் கூறி, நெற்றி, மூக்கு, உள்ளங்கைகள், முழங்கால்கள் மற்றும் கால்விரல்கள் உட்பட ஏழு உறுப்புகளின் மீது ஸஜ்தா செய்வார்.

தனது இரண்டு கைகளையும் அவரது காது, தோள்புஜத்தின் அருகில் பூமியில் விரித்து வைக்க வேண்டும். அப்போது விரல்கள் கிப்லாவை நோக்கியிருக்க வேண்டும். பூமியில் படாமல் முழங்கையை உயர்த்தி, அவரது கையை வயிற்றில் இருந்தும் விலாப்புறத்திலிருந்தும், தோளுக்கும் முழங்கைக்கும் இடைப்பட்ட உறுப்பு தொடையிலிருந்தும் தள்ளி வைக்க வேண்டும்.



⑦

பின்னர் "ஸுப்ஹான ரப்பியல் அஃலாஃ" என ஒரு முறை கூறுவது கடமையாகும். மேலதிகமாக வந்த துஆக்களையும் ஓதுவது அவருக்கு விரும்பத்தக்கது. மேலும் அவர் விரும்பிய துஆக்களையும் கேட்கலாம், குறிப்பாக நபி (ஸல்) அவர்கள் கேட்டதாக வந்துள்ள துஆக்களை கேட்பது ஏற்றமானது.



⑧

பின்னர் கையை உயர்த்தாமல் தக்பீர் சொன்னவராக தலையை உயர்த்துவார். அப்போது இடக்காலை விரித்து வலக்காலை நட்டி, விரல்கள் கிப்லாவை நோக்கி இருக்க உட்காருவார். பின்னர் கிப்லாவை நோக்கி தனது விரலை விரித்தவராக அவரது முட்டுக்கருகில் தொடையில் கையை வைப்பார். அப்போது "ரப்பிஃஹ் பிர்லி" எனக் கூறுவார். தொழுகையில் உட்காரும்போது இம்முறையில்தான் உட்கார வேண்டும். ஆனால் மூன்று அல்லது நான்கு ரக்அத் தொழுகைகளில கடைசி அத்தஹிய்யாத்தில் இருக்கும்போது மாத்திரம் இருப்பை மாற்றி இடது காலை வலது காலுக்கு கீழால் வைத்து உட்கார வேண்டும்.



⑨

பின்னர் தக்பீர் கூறி முதலாவது செய்தது போன்று இரண்டாவது ஸுஜூத் செய்வார். பிறகு தக்பீர் சொல்லி இரண்டாவது ரக்அத்துக்கு எழுந்து முதல் ரக்அத்தில் செய்ததைப் போலவே செய்வார், இரண்டாவதில் தொடக்கத் தக்பீரோ தொடக்க துஆவோ கிடையாது.



இரண்டாவது ஸஜ்தாவை முடித்ததும் அத்தஹிய்யாத்துக்காக அமர்வார்.

அவர் தனது ஆள்காட்டி விரலால் சுட்டிக்காட்டி, நடு மற்றும் பெருவிரலை ஒன்றுடன் மற்றதை சேர்த்து, ஆள்காட்டி விரலை அசைத்து துஆ கேட்பார்.



இந்த அமர்வில் அத்தஹிய்யாத் எனும் பின் வரும் பிரார்த்தனையை கூறவேண்டும். அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு. அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு" வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு" வரஸூலுஹு"

(அதனைத் தொடர்ந்து ஸலவாத்து ஓதவேண்டும்)

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதுன் மஜீது - வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் – கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதுன் மஜீத்

பின்னர் நான்கு விடயங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுவார்: நரக வேதனை, கப்ர் வேதனை, வாழ்வு மரணம் இவ்விரண்டால் ஏற்படும் ஃபித்னா, தஜ்ஜாலின் ஃபித்னா ஆகியவை

பின்னர் விரும்பிய துஆக்களை ஓதுவார். அதில் "என் இறைவா! உன்னை நினைவு கூறவும் நன்றி செலுத்தவும் அழகிய முறையில் உன்னை வணங்கவும் உதவிடு" எனும் துஆவை ஓதுவது மிக ஏற்றமானது.

பிறகு வலது புறம் முகத்தைத் திருப்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் என்று கூற வேண்டும். பிறகு இடது புறம் முகத்தைத் திருப்பி அது போன்றே ஸலாம் கூற வேண்டும். முகத்தை மாத்திரம் திருப்ப வேண்டும் தோற்புயங்களை திருப்பக் கூடாது. மேலும் தலையை மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ உயர்த்தவோ பணிக்கவோ கூடாது.

(இத்துடன் 2 ரகஅத் உடைய தொழுகை நிறைவடையும்)



⑩

தொகுப்பு: கலாநிதி ஹைஸம் ஸர்ஹான், மஸ்ஜிதுன் நபவியில் ஆசிரியர், அஸ்-ஸுன்னஹ் கலாசாலையின் மேற்பார்வையாளர்.

பதிப்பு, வெளியீட்டு, விநியோக உரிமைகள் அனைவருக்கும் அனுமதி.
கையேட்டின் மொழிபெயர்ப்பிற்கு: sarhaan.com அல்லது பார்கோடை ஸ்கேன் செய்யவும்.